**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 47/2024**

**Prosecution witness : அ.சா.1** **Date : 18.06.2025.**

| | |
|---|---|
| **Name : சிந்தாமணி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

1) 4 ஏக்கர் புறம்போக்கு நிலம் எனக்கு பாத்தியம் என எனது புகார் மற்றும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். அனுபவத்தில் உள்ளது குறித்து ஆதாரம் காவல் துறையில் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. கோபி எனக்கு என்ன உறவு முறை என்றால் உறவு முறை இல்லை. கோபி அந்த பகுதியின் கவுன்சிலர் என்றால் எந்த பதவியிலும் இருந்ததில்லை.

2) புறம்போக்கு நிலத்தை நான் சட்டவிரோதமாக ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்பது குறித்து அரசாங்கம் என் மீது புகார் அனுப்பியுள்ளார்கள் என்றால் அவ்வாறு இல்லை. அது தொடர்பாக கோபி மேல் சந்தேகப்பட்டு விட்டு அவர்கள் மீது முன்விரோதம் ஏற்பட்டது என்றால் இல்லை. நீதிமன்ற முதல்விசாரணையில் 20 ஆண்டு காலம் புறம்போக்கு நிலம் சம்மந்தமாக பிரச்சனை உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம்.

3) யாருடன் எனக்கு பிரச்சனை என்றால் அருண் கோபி ஆவார். எதிரிகளுக்கும் எனக்கும் 20 ஆண்டுகளாக பிரச்சனை உள்ளது என்று புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் போது எங்கு செல்லும் போது நடந்தது என்றால் கோழி கடைக்கு

சென்றுவிட்டு வரும் போது நடந்ததாக சொல்லியுள்ளேன். மற்ற வழக்கு சாட்சிகள் என்னுடன் வந்தார்களா என்றால் ஆமாம்.

4) சாட்சிகள் பெருமாள், கோபால் ஆகியோரும் கோழி கடையிலிருந்து வந்தார்களா என்றால் என்னுடன் பின்னால் வந்தார்கள். அவர்கள் எதில் வந்தார்கள் நான் எதில் சென்றேன் என்றால் நான் இரு சக்கர வாகனத்தில் சென்றேன், மற்றவர்கள் எதில் வந்தார்கள் என்று எனக்கு தெரியாது.

5) சாட்சிகள் பெருமாள், கோபால் ஆகியோர் சிறு வயது முதல் நண்பர்கள் என்றால் ஆமாம். உறவினர்கள் இல்லை. கூட்டமாக என் காட்டில் விளையாடியதாக சொல்லிய நிலையில் அந்த கூட்டத்தில் யார் யார் இருந்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எத்தனை நபர்கள் இருந்தனர் என்றால் 10 பேர் இருந்தார்கள். யார் யார் என்று சொல்லியுள்ளேனா என்றால் தெரிந்தவரை சொல்லியுள்ளேன்.

6) அருண், கோபி, ரகுநாத் மற்றும் இரு நபர்கள் பெயர்களை சொல்லியுள்ளேன். இரு நபர்களின் பெயர் தெரியாது. அவர்களது தகப்பனார் பெயரும் தெரியாது. காட்டில் என்ன வெள்ளாமை இருந்தது என்றால் அவரை இருந்தது. கிரிக்கெட் விளையாட மைதானமாக இருந்தால் தான் விளையாட முடியும், அவரை செடி நடுவே விளையாட முடியாது என்றால் ஆமாம்.

7) நான் சொன்ன தேதியில் அந்த இடத்தில் யாரும் விளையாடவும் இல்லை என்றும் அந்த இடத்தில் கிரிக்கெட் மைதானம் இல்லை என்றால் சரியல்ல. யார் யார் என்னை அடித்தார்கள் என்று புகாரிலும், முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திலிருந்து ஜலகண்டாபுரம் தான் பக்கம் ஓமலூர் தூரம் என்றால் ஆமாம்.

8) ஜலகண்டாபுரத்தில் தனியார் மற்றும் அரசு மருத்துவமனை உள்ளது என்றால் ஆமாம். தாரமங்கலம் சென்று பிறகு தான் ஓமலூர் செல்ல முடியும் என்றால் ஆமாம். தாரமங்கலத்திலும் அரசு மற்றும் தனியார் மருத்துவமனை உள்ளது என்றால் ஆமாம். செலவடையிலிருந்து ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனைக்கு செல்ல வேண்டுமென்றால் காவல் நிலையத்தை கடந்து

தான் செல்ல வேண்டுமென்றால் ஆமாம். எதிரிகள் அடித்தவுடன் ஜலகண்டாபுரம் காவல் நிலையத்திற்கோ, அரசு மருத்துவமனைக்கோ செல்லாமல் இருக்க என்ன காரணம் என்றால் அன்று விடுமுறை என்பதால் செல்லவில்லை. காவல் நிலையத்திற்கும், மருத்துவமனைக்கும் விடுமுறை கிடையாது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

9) எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் மாலை சுமார் 7 மணிக்கு சென்றேன். செல்வமணி, ரமேஷ் இருவரும் என்னை மருத்துவமனையில் சேர்த்தனர். காவல் நிலையத்தில் யார் புகார் அளித்தார்கள் என்றால் என் நண்பர்கள் கொடுத்தார்கள். எந்த நண்பர் என்று தெரியாது. புகார் அளித்த விவரம் என்னிடம் நண்பர்கள் சொன்னார்கள். சம்பவம் நடந்த அன்று 10 மணிக்கு புகார் கொடுத்த விவரத்தை என்னிடம் சொன்னார்கள். எத்தனை மணிக்கு அவர்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விவரத்தை என்னிடம் சொல்லவில்லை.

10) போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தனர் என்றால் அடுத்த நாள் காலை 10 மணிக்குள் மருத்துவமனையில் வந்து விசாரித்தார்கள். அதன் பின்னர் என்னை போலீசார் விசாரிக்கவும் இல்லை, வாக்குமூலமும் பெறவில்லை. நான் போலீசாருக்கு சம்பவயிடத்தை அடையாளம் காட்டவில்லை என்றால் ஆமாம். யார் வந்து வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் போலீசார் பெற்றார்கள். உதவி ஆய்வாளர் வரவில்லை என்றால் மருத்துவமனைக்கு வந்து விசாரித்தார்கள். அதன் பிறகு உதவி ஆய்வாளர் வாக்குமூலம் பெற்றாரா என்றால் இல்லை.

11) என்னிடம் உதவி ஆய்வாளர் எந்தவித வாக்குமூலமும் பெறவில்லை என்றால் ஆமாம். நான் சொன்னவாறு எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் ஆக்கிரமிப்பு புறம்போக்கு நிலம் தோப்பு நிலம் என்றாலும் அதில் என்னை வெளியேற்ற நடவடிக்கை எடுத்ததால் எதிரிகள் தான் அவ்வாறு வெளியேற்று நடவடிக்கைக்கு காரணம் என எண்ணிக் கொண்டு அவர்களுக்கு தொந்தரவு கொடுக்கும் நேரத்தில் எந்த சம்பவமும் நடக்காமல் எனக்கு வேண்டியவர்களை

வைத்து நடக்காத சம்பவத்தை நடந்தது போல் கூறி பொய் வழக்கு கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C. 47/2024**

**Prosecution witness : அ.சா.2** **Date : 18.06.2025.**

| Name : பெருமாள் | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused present. )**

**சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.**

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் நாச்சம்பட்டியில் குடியிருந்து தறி வேலை செய்கிறேன். அ.சா.1 தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 16.01.2022ம் தேதி மாலை 6.30 மணிக்கு நான் மட்டும் எனது இரு சக்கர வாகனத்தில் ஜலகண்டாபுரம் நோக்கி சென்ற போது முனியப்பன் கோவில் அருகே சென்ற போது அங்கு கோபி, அருண் இருவரும் சிந்தாமணியை கிரிக்கெட் விளையாடும் மட்டையால் தலையில் அடித்தார்கள்.

2) பிறகு கூட்டம் கூடியது. கோபி, அருண் இனிமேல் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என அ.சா.1யை பேசினார்கள். ஆஜர் எதிரிகள் தான் என சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

3) அ.சா.1 எவ்வளவு நாட்களாக பழக்கம் என்றால் சின்ன வயது முதல் தெரியும். எனக்கு உறவினர் ஆவார். முனியப்பன் கோயில் அருகே இருந்த நிலம் யாருடையது என்றால் புறம்போக்கு நிலம் அதை யார் அனுபவித்து வந்தார்கள் என்றால் திருவேங்கடம், கணேசன் வகையறா அவர்களது தாத்தா காலத்திலிருந்து அனுபவித்து வந்தார்கள்.

4) அதற்கான ஆவணம் நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. நிலத்தை ஆக்கிரமிப்பு அகற்ற வேண்டி அரசாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் நான் அந்த இடத்தில் இல்லை என்பதால் எனக்கு அது பற்றி தெரியாது. என் வீடடிற்கு அ.சா.1 வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் 10 அடி தூரம் தான் இருக்கும். என் வீட்டிற்கும் சம்பவம் நடந்த இடத்திற்கும் ½ கிலோமீட்டர் தூரம் இருக்கும்.

5) கோபால், நான், சிந்தாமணி மூவரும் ஜலகண்டாபுரத்திலிருந்து சம்பவம் நடந்த போது வந்ததாக சொன்னால் அது தவறாகும் என்றால் ஆமாம். நான் சண்டையை விலக்கவில்லை என்றால் ஆமாம். சம்பவயிடத்தில் எத்தனை பேர் இருந்தனர் என்றால் 100, 200 நபர்கள் இருந்தனர். யார் கிரிக்கெட் விளையாடினார்கள் யார் யார் கையில் கிரிக்கெட் உபகரணம் இருந்தது என்பது எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது.

6) அந்த பூமியில் விவசாயம் செய்யப்பட்டிருந்ததா என்றால் பச்சைபயிறு, காராமணி, சோளம் ஆகியவை விளைவிக்கப்பட்டிருந்தது. கிரிக்கெட் பயிர் வளர்க்கும் இடத்தில் விளையாட முடியாது மைதானத்தில் தான் விளையாட முடியும் என்றால் ஆமாம். நான் அடிப்பட்ட நபரை மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்க்கவில்லை என்றால் ஆமாம். ஜலகண்டாபுரம் காவல் நிலையம் சம்பவயிடத்திலிருந்து எவ்வளவு தூரம் என்றால் 3 கிலோமீட்டர் தூரம் இருக்கும்.

7) ஓமலூருக்கு எவ்வளவு தூரம் என்றால் 25 கிலோமீட்டர். ஜலகண்டாபுரத்தில் அரசு மருத்துவமனை, தனியார் மருத்துவமனை உள்ளது என்றால் சரிதான். சம்பவயிடத்திலிருந்து தாரமங்கலம் எவ்வளவு தூரம் என்றால் 7 கிலோமீட்டர் தூரம். அங்கும் அரசு மற்றும் தனியார் மருத்துவமனை உள்ளதா என்றால் உள்ளது. என்னை போலீசார் சம்பவ தினத்திற்கு மறுநாள் சம்பவயிடத்தில் வைத்து விசாரித்தனர்.

8) தொல்காப்பியன் என்ற காவல் அதிகாரி என்னை விசாரித்தார். அவரிடம் முதல் விசாரணையில் சொன்னது போல் தான் சொன்னேன் என்றால் ஆமாம். வாக்குமூலம் பதிவு செய்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, ஆனால்

என்னை விசாரித்தார். கோபி, அருண் குடும்பத்திற்கும், என் அண்ணன் மகன், நான் ஆகியோர் என்ன உறவு என்றால் உறவு இல்லை பக்கத்து தெருவை சேர்ந்தவர்கள். நானும் சிந்தாமணியும் இளவம்பட்டி பஞ்சாயத்தை சேர்ந்தவர்கள். கோபி, அருண் எந்த பஞ்சாயத்தை சேர்ந்தவர்கள் என்று எனக்கு தெரியாது. பஞ்சாயத்தில் பொறுப்பிலிருந்தாரா கோபி என்ற விவரமும் எனக்கு தெரியாது.

9) எதிரிகள் குடும்பத்திற்கும், சிந்தாமணி குடும்பத்திற்கும் பிரச்சனை இருந்ததா என்றால் 20 வருடத்திற்கு முன்பு காடு சம்மந்தமாக பிரச்சனை இருந்தது. என்ன பிரச்சனை என்றால் நான் சிறு வயது என்பதால் தெரியாது. கோபிக்கு என்ன வயது என்றால் தெரியாது. அவர் பஞ்சாயத்தில் பொறுப்பில் உள்ளார் என்றால் தெரியாது. நான் சொல்வது போல் இரு குடும்பத்திற்கும் இடையே எந்த பிரச்சனையும் இல்லை என்றால் எனக்கு தெரியாது.

10) என்னை விசாரித்த தொல்காப்பியன் அதிகாரியிடம் யார் யாருக்கு எப்படி அடிப்பட்டதாக சொல்லியுள்ளேனோ அது போல் தான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் அது போல் நான் யாரிடமும் சொல்லவில்லை. அரசாங்கம் தோப்பு புறம்போக்கை ஆக்கிரமித்திருந்த சிந்தாமணியை காலி செய்ய நடவடிக்கை எடுக்க கோபி தான் காரணம் என எண்ணி சிந்தாமணி நடக்காத ஒரு சம்பவத்தை நடந்தது போல் சொல்ல எனது அண்ணன் மகன் என்பதால் அவருக்கு அனுசரனையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு சம்பவம் நடக்கவில்லை யாரும் யாரையும் அடிக்கவில்லை அதனால் சிந்தாமணிக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 47/2024**

**Prosecution witness : அ.சா.3** **Date : 18.06.2025.**

| | |
|---|---|
| **Name : ராஜகோபால்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

**சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

1) நான் காட்டம்பட்டியில் குடியிருந்து நிதி தொழில் செய்கிறேன். அ.சா.1 தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 16.01.2022ம் தேதி மாலை 5.00 முதல் 6.00 மணி சுமாருக்கு சிந்தாமணி மற்றும் அருண், கோபி ஆகியோருக்கு இடையே சண்டை நடந்தது. மறுநாள் மதிய வேளையில் சம்பவம் நடந்த இடமான நாச்சம்பட்டி முனியப்பன் கோவில் அருகே ஜலகண்டாபுரம் காவல் துறையினர் சம்பவயிடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள். அதில் நான் மற்றும் ரவி இருவரும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். பார்வை மகஜரிலுள்ள விவரம் எனக்கு தெரியும். பார்வை மகஜர் **அ.சா.ஆ.2** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2) ரவி என்பவர் என் பங்குதாரர் என்றால் ஆமாம். பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனம் என்றால் ஆமாம். அதன் பெயர் ஸ்ரீ நியூ மதுரா. மொத்தம் 5 பங்குதாரர்கள் ஆவர். அதில் சிந்தாமணியும் ஒருவர் என்றால் இல்லை. என் அண்ணன் ராஜேஸ்வரன், என் அம்மா ஈஸ்வரி, என் மனைவி புஷ்பா ஆகியோர் பங்குதாரர்கள். சுமார் 7, 8 ஆண்டுகளாக எனக்கு சிந்தமாணி பழக்கம். வாகனங்களுக்கு பைனான்ஸ் கொடுக்கும் வகையில் ஜலகண்டாபுரம் காவல்

நிலையத்துடன் தொடர்பு உள்ளது என்றால் இல்லை. போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றனரா என்றால் இல்லை. வரைபடம் வரைய வேண்டுமென யார் என்னை அழைத்தது என்றால் ஜலகண்டாபுரத்தில் உள்ள என் அலுவலகத்திற்கு வந்து போலீசார் அழைத்தனர். என்னை அழைத்த அதிகாரி யார் என்றால் எனக்கு தெரியாது. அதற்கு முன்னரே இவ்வாறு சம்பவம் குறித்து போலீசாருக்கு தகவல் கொடுத்தேனா என்றால் இல்லை. நானும் ரவியும் தான் சிந்தாமணியை மருத்துவமனைக்கு அனுப்பினோம்.

3)ஜலகண்டாபுரத்தில் அரசு மற்றும் தனியார் மருத்துவமனை உள்ளது என்றால் ஆமாம். சம்பவம் நடந்த இடத்திலிருந்து மருத்துவமனைக்கு எந்த வழியில் சென்றாலும் காவல் நிலையத்தின் வழியாக தான் செல்ல வேண்டும். நான் போலீசார் விசாரிக்கும் போது சம்பவம் கேள்விப்பட்டதாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். ஜலகண்டாபுரம் மருத்துவமனைக்கு அனுப்பாமல் ஓமலூர் மருத்துவமனைக்கு செல்ல வேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டது என்றால் தாரமங்கலம் மருத்துவமனைக்கு சென்று பின்னர் ஓமலூர் மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டார்.

4) சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து ஜலகண்டாபுரத்தை விட உள்ள தாரமங்கலம் தூரம் தான் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திற்கு நான்கு எல்லைகளில் யார் யார் நிலம் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வரைபடத்தில் கையொப்பம் செய்தனா என்றால் செய்தேன். ரவியும் நானும் கையொப்பம் செய்தோம்.

5) மகஜரில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சொன்னவாறு ஒரு சம்பவமும் நடக்கவில்லை என்றும் நான் சம்பவயிடம் செல்லவில்லை என்றும் சம்பவயிடத்தில் மகஜர் தயார் செய்யப்படவில்லை என்றும் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட ஆவணம் என் செல்வாக்கில் தயார் செய்யப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. சொத்தை காப்பாற்றிக் கொள்ள சிந்தாமணியால் கொடுக்கப்பட்ட பொய் வழக்கில் வரைபடம் வரைந்ததாக மகஜர் தயாரித்ததாகவும் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/- தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.